தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 1, சுபானு–திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 பிப்ரவரி 13, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

செயலாற்றல் பற்றிய நூலறிவைப் பெற்றிருந்தாலும் உலக நடைமுறைகளை உணர்ந்து பார்த்தே அதற்கேற்றவாறு அச்செயல்களை நிறைவேற்ற வேண்டும்.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 61, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

61—

குளம் தூர் வாருதல்

***18736—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில் புலிமுகத்தான் குளத்தை தூர் வாரி மராமத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2004 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். பரிசீலனையில் உள்ளது.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கொள்ளப்படும் என்று பதிலளித்துள்ளதால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுகின்ற விதத்திலே குளங்கள் எல்லாம் தூர் வாரப்பட்டு, மழைநீரினுடைய கொள்ளளவை அதிகப்படுத்தியிருக்கிற அரிய திட்டத்தை நான் பாராட்டுகிற அதே நேரத்தில், கழிந்த ஆண்டு அதிகமான பணிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்றிருக்கின்றன. என்னுடைய மாவட்டத்திலும் நடைபெற்றிருக்கிறது; குறிப்பாக என்னுடைய தொகுதியிலும் கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய்க்கு குளங்கள் தூர் வாருகின்ற பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் அதிகமான குளங்கள் அந்தப் பகுதியிலே தூர் வாரப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தால், அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற திட்டத்தின்படி இந்த ஆண்டு அதிகமான நீர் கொள்ளளவு கொள்ளக்கூடிய குளங்களை தூர் வாரி, சுத்தப்படுத்தி, அதிகமான நீர் கொள்ளளவு கொள்கின்ற விதத்திலே எத்தனை கோடி ரூபாய் எங்களுடைய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது? அதிகமான குளங்கள் தூர் வாரப்படுமா என்பதையும் உங்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், கடந்த ஆண்டைப்போல, இவ்வாண்டிலும் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குளங்களை எல்லாம் தூர் வாருவதற்கும் வரத்து வாய்க்கால்களை செப்பனிடுவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் பகுதியிலே எந்தப் பணி செய்ய வேண்டுமென்று கோரிக்கை

விடுப்பாரேயானால், அந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 62, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

62—

பாலம் அமைத்தல்

***30823—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள தாலுகா ஆபீஸ் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தாலுகா ஆபீஸ் பாலம் அமைந்துள்ள இடம் எனது அரவக்குறிச்சி தொகுதியின் தலைமையிடமான அரவக்குறிச்சி ஆகும். இப்பேரூராட்சியினர் தினமும் இப்பாலத்தின் வழியாகவே தேசிய நெடுஞ்சாலைக்கோ, பள்ளிக்கூடங்களுக்கோ, அரசு மருத்துவமனைக்கோ செல்ல வேண்டும். இத்தாலுகா ஆபீஸ் பாலம் அருகிலேயே வட்டாட்சியர் அலுவலகம், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், காவல் நிலையம், அரசு மருத்துவமனை முதலிய பல முக்கிய இடங்கள் அமைந்திருப்பதால், தினமும் இப்பாலத்தை பல நூற்றுக்கணக்கானோர் உபயோகப்படுத்துகின்றனர். சிறியதாக மழை